## விமான விபத்து:

# மகாராஷ்டிர மாநில துணை முதலமைச்சர் அஜித் பவார் உயிரிழப்பு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜன. 29 -

மகாராஷ்டிர மாநிலத் துணை முதலமைச்சர் அஜித் பவார் அவர்களின் மறைவிற்கு இரங்கல் தெரிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-



**மகாராஷ்டிர மாநிலத் துணை முதலமைச்சர் அஜித் பவார் அவர்களும், அவருடன் பயணித்தவர்களும் விமான விபத்தில் உயிரிழந்த துயரச் செய்தி அறிந்து மிகவும் வேதனையடைந்தேன்.**

**மிகப் பெரும் துன்ப நிகழ்வான இதனை ஏற்றுக் கொள்ள நெஞ்சம் மறுக்கிறது.**

**திரு. சரத் பவார், திருமதி சுப்ரியா சுலே உள்ளிட்டவர்களுக்கும், இக்கொடும் விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினர் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.






தென்காசி வடக்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் சங்கரன்கோவிலில் பரமபால்பாண்டியன் நினைவு திடல் முப்புடாதி அம்மன் கோவில் முன்பு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் உதயகுமார் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் முனைவர் சபாபதி மோகன் பங்கேற்று எழுச்சி உரையாற்றினார். உடன் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ.தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தங்கவேலு,சீனிவாசன், பரமகுரு,மாவட்ட அவைத்தலைவர் சுப்பையா,பொருளாளர் சரவணன், துணை செயலாளர் புனிதா,மாநில மருத்துவரணி துணை செயலாளர் செண்பக விநாயகம்,மாநில வர்த்தக அணி இணை செயலாளர் முத்துச்செல்வி உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர். நகர செயலாளர் மு.பிரகாஷ் வரவேற்புரையாற்றினார்.

## இன்று சிங்கம்புணரியில் நடைபெறுகிறது!

# சிவகங்கை மாவட்டக் கழக செயற்குழு கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் கே.ஆர் .பெரிய கருப்பன் அறிவிப்பு!

*சிவகங்கை, ஜன.29-*

*சிவகங்கை மாவட்டச் செயலாளர் - அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் தனது அறிக்கையில்,*

*இன்று (29ஆம் தேதி - வியாழக்கிழமை) சிங்கம் புணரியில் சிவகங்கை மாவட்டக் கழகச் செயற்குழு கூட்டம் நடைபெறுகிறது என்று தெரிவித்துள்ளார்.*

*இது குறித்து கூட்டுறவுத்துறை அமைச்சர் சிவகங்கை மாவட்ட கழகச் செயலாளர் கே.ஆர்.பெரிய கருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது.*



*இன்று (29ஆம் தேதி - வியாழக்கிழமை) காலை 10 மணி அளவில் சிவகங்கை மாவட்ட கழக செயற்குழு கூட்டம் சிங்கம்புணரி அண்ணா மன்றத்தில் மாவட்ட அவைத் தலைவர் வழக்கறிஞர் அ.கணேசன் தலைமையில் நடைபெறுகிறது. இந்த கூட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர ,பேரூர் கழகச் செயலாளர்கள் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் சார்புஅணி நிர்வாகிகள், தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.*

*கூட்டத்தில் விவாதிக்கப்பட வேண்டிய பொருட்கள்.*

*1. நாளை 30, 31 ஆகிய தேதிகளில் தமிழ் நாடு முதலமைச்சர் அவர்கள் சிவகங்கை மாவட்டம் வருகை குறித்து.*

*2. விருதுநகரில் பிப்ரவரி 7ம்தேதி நடைபெற உள்ள மண்டல இளைஞரணி மாநாடு குறித்து.*

*3. பிப்ரவரி 1ஆம் தேதி வெல்லும் தமிழ் பெண்கள் பரப்புரை குறித்து.*

*4. கழக வளர்ச்சிப் பணிகள்.*

*இவ்வாறு கூட்டுறவு துறை அமைச்சர், மாவட்ட கழக செயலாளர் கே.ஆர். பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*



நாகர்கோவில் மாநகராட்சி, 36 வது வார்டுக்குட்பட்ட கோட்டார், முதலியார்விளை ஊர் பொதுமக்கள் அளித்த கோரிக்கையின் அடிப்படையில் மாநகராட்சி ஆணையாளர், அதிகாரிகளுடன் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் ஆய்வு மேற்கொண்டார். ஆய்வில் மாநகராட்சி ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா, உதவி பொறியாளர் பிரபாகரன், தொழில்நுட்ப அலுவலர் அனந்த பத்மநாபன், மாமன்ற உறுப்பினர் ரமேஷ், சுகாதார அலுவலர் ராஜா, பகுதி செயலாளர் மு.சேக்மீரான், வட்ட செயலாளர் முருகன், மாநகராட்சி அதிகாரிகள் உட்பட கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

## தூத்துக்குடி வட்டம் – மாப்பிள்ளையூரணி கிராம கடற்கரை பகுதியில்

# கடலில் மூழ்கி உயிரிழந்த 3 சிறுவர்களின் பெற்றோருக்கு தலா ரூ.3 லட்சம் நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, ஜன. 29 -**

**தூத்துக்குடி மாவட்டம் மற்றும் வட்டம், மாப்பிள்ளையூரணி கிராமம், சிலுவைப் பட்டி மொட்டை கோபுரம் கடற்கரை பகுதியில் கடலில் மூழ்கி உயிரிழந்த மூன்று சிறுவர்களின் பெற்றோருக்கு ஆறுதல் தெரிவித்தும், நிதியுதவியும் வழங்கியும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு:-

தூத்துக்குடி மாவட்டம் மற்றும் வட்டம், மாப்பிள்ளையூரணி கிராமத்தைச் சேர்ந்த செல்வன். திருமணி (வயது 13) த/பெ.வனராஜன், செல்வன். நரேன் ஸ்ரீ கார்த்திக் (வயது 12) த/பெ.ஆறுமுகம் மற்றும் செல்வன். முகேந்திரன் (வயது 12) த/பெ.கதிரேசன் ஆகிய மூன்று சிறுவர்கள் 26.01.2026 அன்று மாலை சுமார் 04.15 மணியளவில் மாப்பிள்ளையூரணி கிராமத்தில் உள்ள சிலுவைப்பட்டி மொட்டை கோபுரம் கடற்கரை பகுதியில் கடலில் குளிக்கச் சென்றபோது எதிர்பாராதவிதமாக கடலில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த மூன்று சிறுவர்களின் பெற்றோருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்த சிறுவர்களின் பெற்றோருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.



தேனி வடக்கு மாவட்டம் பழனி செட்டிபட்டி பேரூராட்சி சார்பாக பழனி செட்டிபட்டி பேரூராட்சியில் கட்டணமில்லா சுத்தரிக்கப்பட்ட குடிநீர் நிலையத்தை வடக்கு மாவட்ட செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. துவக்கி வைத்தார். உடன் பேரூராட்சி சேர்மன் வழக்கறிஞர் மிதின் சக்கரவர்த்தி, துணை சேர்மன் மணிமாறன், போடி கிழக்கு ஒன்றிய துணை செயலாளர் தமிழ்வாணன், பேரூராட்சிகள் துறை உதவி இயக்குனர் வில்லியம் ஜேசுதாஸ், பேரூர் செயலாளர் செல்வராஜ், பேரூராட்சி செயல் அலுவலர் சுதாமற்றும் கவுன்சிலர்கள், அரசு அதிகாரிகள் கலந்து உள்ளனர்.



தமிழ்நாடு சட்டப்பேரவையில் நடைபெற்ற சட்ட விதிகள் ஆய்வு குழு கூட்டத்தில் தமிழ்நாடு சட்டமன்ற சட்ட விதிகள் ஆய்வுக் குழு தலைவர், விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ. வி.மார்க்கண்டேயன் தலைமையில் அறிக்கையின் மீது துறை எடுத்த நடவடிக்கை குறித்து ஆய்வு மேற்கொண்டார்.ஆய்வு குழு உறுப்பினர்கள் ராஜா, கண்ணன், கிருஷ்ணசுவாமி, தியாகராஜன் ரகுராமன், ஸ்டாலின்குமார், அர்ஜுனன், செந்தில்நாதன், பாலசுப்பிரமணியன், மான்ராஜ், தாரகை கத்பர்ட் இணைச் செயலாளர் தேன்மொழி துணைச் செயலாளர் உடையார்சாமி சார்பு செயலாளர் மாணிக்கம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### இரா. வெற்றிகொண்டான்

### சனவரி 29 (2011)



பேரறிஞர் அண்ணாவின் தென்றல் நடை மேடைப் பேச்சாலும் – தலைவர் கலைஞர் அவர்களின் கனித்தமிழ்ப் பேச்சாலும் ஈர்க்கப்பட்டு, தனது இளம் வயதிலேயே கழகத்தில் ஈடுபாடு கொண்டவர்.

தலைவர் உடன்பிறப்புகளுக்கு எழுதிவரும் கடிதங்களால் உந்தப்பட்டு எழுதும் ஆற்றல்பெற்று கட்டுரையாளராகவும் – "பொழுது விடியும்" எனும் நாடகத்தை எழுதி, இவரே நடித்தும் – 'கண்ணியம்'எனும் ஏட்டின் துணை ஆசிரியராகப் பணிபுரிந்தும் மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியவர்.

கழகம், மக்களுக்காக நடத்திய அறப்போராட்டங்கள் பலவற்றில் பங்கு கொண்டு பலமுறை கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். குறிப்பாக நெருக்கடிகால 'மிசா' சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

கழக தீர்மானக்குழுவின் செயலாளராகவும் – தலைசிறந்த முன்னோடிப் பேச்சாளராகவும், தமிழகத்தின் பட்டிதொட்டியெல்லாம் கழகக் கருத்துக்களையும், தலைவரின் எண்ணங்களையும் பாமர மக்களும் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் பரப்பி வந்தவரும் – தலைவர் கலைஞரின் இதயத்தில் நீக்கமற நிறைந்திருந்தவரும் – கழகத் தொண்டர்களின் மனத்திரையில் மறக்க முடியாதவருமான இவரது மறைவு குறித்து தலைவர் கலைஞர் அவர்கள் துயரத்தால் கண்களைக் கண்ணீர்க் குளமாக்கிக் கொண்டு எழுதிய வைர வரிகள்; "இருக்கின்றாய் நீ என்றைக்கும் கழகத்தோடு – அண்ணாவோடு –அவர்தம் தம்பியராம் எங்களோடு!".

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



தென் மண்டல இளைஞரணி நிர்வாகிகள் சந்திப்பு சம்பந்தமாக மதுரை மாநகர் மாவட்டம் மதுரை வடக்கு சட்டமன்றத் தொகுதி புதூர் பகுதி வார்டு அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர் பாக அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் பகுதி செயலாளர் அண்ணன் புண்ணியமூர்த்தி அவர்களது தலைமையில் கழக DMK Youth Wing துணைச் செயலாளர் Tamil Nadu Adi Dravidar Housing and Development Corporation Ltd. தலைவர் ilaiyaraja dmk) மாவட்டக் கழக செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் தளபதி மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சௌந்தரராஜன், புதூர் பகுதி இளைஞரணி அமைப்பாளர் சு.கேசவன் மற்றும் வட்ட செயலாளர்கள் மாதவன்,வேலு ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினார்கள்.